Fachstelle Integration Graubünden, Grabenstrasse 1, 7001 Chur

அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் மற்றும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொழிலில் முன்றேுவதற்கான ஊக்குவிப்புத் திட்டம்.

# தொழிலைப் பழகிப் பார்த்தல்



Fachstelle Integration Graubünden
Post spezialisà per l'integraziun dal Grischun
Servizio specializzato per l'integrazione dei Grigioni



**Tamil**

Grabenstrasse 1
7001 Chur
081 257 26 38
www.hallo.gr.ch
www.fluechtlinge.gr.ch



## நோக்கம

- ஒரு தொழிலகத்தில் பல மாதங்களுக்கு ஒரு தொழிலை செய்து பார்த்தல்.
- தொழிலுக்குத் தேவையான நிபுணத்துவம்– மற்றும் மொழித் திறமையை நடைமுறையில் பயன்படுத்துதல்.
- தொழில் திறமையில் உள்ள தகுதி மற்றும் அளவை வழமையான தொழில் நாட்களின்போது பரீட்சித்துக்கொள்வது.
- சிறப்பான வகையில் மற்றும் தேவைப்படும் வேளையில் ஒரு தொழில் வழங்குனர், தொழிலைப் பழகிப் பார்த்து முடிந்தபின், காண்பிக்கப்பட்ட பொறுப்புணர்வு மற்றும் காணக்கூடியதாகவிருந்த திறமைகளுக்காக ஒரு தொழிற்கல்விக்கான இடத்தையோ, ஒரு பகுதிநேர அல்லது நிரந்தர வேலைக்கு நியமனம் செய்யலாம்.

## பழகிப் பார்த்தல் குறித்த நிபந்தனைகள்

- தொழிலைப் பழகிப் பார்ப்பதை ஆரம்பிப்பதற்கு முன்பாக அது குறித்த நிபந்தனைகள் கலந்துரையாடப்பட்டு, ஒப்பந்தம் மூலமாக உறுதிசெய்யப்பட்டு, அனைத்துப் பகுதியினராலும் கையொப்பம் இடப்படும். இதற்கான காலம் ஒவ்வொரு வேளையிலும் தனிப்பட்ட விதத்தில் தீர்மானிக்கப்படும்.

# தொழிலைப் பழகிப் பார்த்தல்

## உறுதியான முடிவுகள் மற்றும் சந்தர்ப்பங்கள்

- நீங்கள் உங்கள் திறமைகள் மற்றும் பொறுப்புணர்வை காண்பித்துக் கொள்ள வேண்டும்.
- உங்களுக்கு தரப்பட்டுள்ள தொழில் பழகும் வாய்ப்பு ஊடாக, உங்களது செயற்பாட்டை பிற தொழிலாளர்களோடு ஒப்பிட்டுக்கொள்வதற்கும், உங்கள் பொறுப்புணர்வு குறித்து கற்றுக்கொள்வதற்கும் சரியாக மதிப்பீடு செய்வதற்கும் சந்தர்ப்பம் உள்ளது.
- நீங்கள் இயலுமானவரை உங்கள் தொழில் திறமையை வெளிப்படுத்த முயல்வதுடன், ஒரு சிறப்பான பொதுக் கருத்து உருவாகச் செய்ய வேண்டும்.
- நீங்கள் தொழில் உலகில் புதிய உறவுகள் மற்றும் நண்பர்களின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.
- உங்களது டொச் அறிவை மிக அதிகளவில் திறமையாக்கலாம்.
- தொழிலைப் பழகிப் பார்த்த முடிவில் தொழில் வழங்குனரிடமிருந்து ஒரு நற்சான்றுப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். சிறப்பான நற்சான்றுப்பத்திரம் தொழில் தேடுவதற்கும், அடுத்த படியை திட்டமிடுவதற்கும் உதவியாக இருக்கும்.

## இதன் தொடர்ச்சியான சந்தர்ப்பங்கள்

- மேலும் ஒரு தொழிலைப் பழகிப் பார்ப்பது
- ஒத்துழைத்து முன்னேற்றும் நிலையத்தினால் நடத்தப்படும் இதுவரை பங்கேற்காத பாடத்திட்டம் ஒன்றில் பங்கேற்பது.
- தொழிலில் நிபுணத்துவம் பெற மேலதிக பயிற்சி வகுப்பு
- ஒரு வழக்கமான தொழிற்கல்வி
- ஒரு பகுதி வேலை – அல்லது நிரந்தர நியமனம்.